548

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - MAY 1957
MADRAS

# முல்லைக் கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

கிழமைப் பதிப்பு] [வெள்ளிக் கிழமையில்

ஆசிரியர்: இளவழகனார்

| கிளை | துன்முகி, மாசி 25௳. | தளிர் |
|---|---|---|
| 9 | 8—3—57 | 21 |

9-ம் ஆண்டுக்கையொப்பம்
(14-10-56 முதல்)

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | ரூ. | 0 1 0 |
| ஆயுள் - கையொப்பம் | ரூ. | 100 0 0 |

முகவரி:

குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ் நாடு.

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## திறனும் அறனும்

இந்தத் திருக்குறளில் திறனைப் பற்றியும் அறனைப் பற்றியும் வருகின்றன இரண்டும் நல்லவையே; இரண்டும் தேவையே; இரண்டும் நல்லோர் செய்கைகளே. ஆயினும், திறன், நல்லவரல்லாரும் செயல் கூடும்; அறன், நல்லோர் மட்டுமே செய்தற்குரியது.

திறன் என்பது கூறுபாடு; அல்லது பாகுபாடு; திறமை, இப்படி வகையுறச் செய்வது! வகை தொகை யில்லாத செயல், ஒழுங்குறாது, ஒழுங்குறாத செயல், தகுதியாகப் பயன் தராது, உள்ளமும், தகுதி பெறாது; தகுதியற்ற உள்ளத்தின் அடையாளமே திறனற்ற செயல். பிறர்க்கும் தமக்கும் இங்ஙனந் தகுதி குன்றித் தீங்குகட்கு இடமாகும்; திறனல்ல இதனால் தகுதியல்லன வாய்த் தீங்காதல் கண்டுகொள்ளப்படும்.

இனி. அறன் என்பது வரையறை. நல்லன இவை என்று தேர்ந்து வரையறுத்துக்கொள்ளப்பட்டவை, அந் நல்லனவற்றிலும் தமக்குரிய கடமை அல்லது முறைமை இவையென்று பின்னும் வரையறுத்துக்கொள்ளப்பட்டவை, அவற்றையும். தனக்கென்னும் தன்னலப் பற்று அறுத்துப். பிறர்க்கெனப் பயனுக்குபவை 'அறன்' என்னும் அரிய செஞ்சொல்லுக்கு உரிய சிறப்புப் பொருளாகும். இங்ஙனம் அழுக்கு நீங்கிய அதனையே 'உண்மை' என்பதுமாம்.

இந்தத் திருக்குறளில் 'அறனல்லன' என்பது, தனக்குக் கடமையல்லன என்னுங் கருத்தில் வந்துள்ளது.

வகையல்லாத செயல்களைப் பிறர் தன்னிடத்துச் செய்து இடர்ப்படுத்தினாலும், இருபக்கமும் அதனால் உண்டாகுந் துன்பங்களுக்கு வருந்தி, தான் தனக்கு முறையல்லாதவற்றை ஒருவன் செய்யாமலிருப்பது நல்லது. அவ்வளவோடு அதனை மறந்து அவரது மனமாற்றத்தை நாடுதலே தக்கது என்றபடி.

(8 ம் பக்கம் பார்க்க)

**திறனல்ல தற்பிறர் செய்யினும்
நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.**

திறன் அல்ல தன் பிறர் செய்யினும் – தகுதியல்லாதன தன்னிடம் பிறர் செய்தாலும், நோ நொந்து—அதற்காக அவர் அடைய வேண்டுந் துன்பத்துக்குத் தான் வருந்தி, அறன் அல்ல செய்யாமை நன்று – தனக்குக் கடமையல்லாதன அவர்க்குச் செய்யாமை நல்லது.

தக்கோர் எதனையும் பாகுபடச் செய்வர்; தகாதார் செய்கையே அத் திறனற்றிருக்கும்; திறனல்ல செய்தல் ஒன்றே அவர் தகாதார் என்பதைக் காட்டும்; அத் தகையோர் செய்கை என்றற்குத் 'திறனல்ல' என்றார்.

பன்மையாகக் கூறினார் பலவாகச் செய்யினும் என்றற்கு; பிறர் திறனல்ல பல செய்யினும் தானும் அறனல்ல பல செய்யலாகாதென்பது அப் பன்மையாலும் உணரப்படும்.

இயல்பாகவே அவர் எய்தும் நோவுக்கு நொந்து என்றார் நோ எய்தியே தீரும் என்பது தெளிதற்கு.

(8-ம் பக்கம் பார்க்க)

''என்கடன் பணி செய்து கிடப்பதே''



யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''

—புறநானூறு.


# முல்லைக் கொடி

| கிளை | துன்முகி, மாசி | தளிர் |
|---|---|---|
| 9 | 8-3-57 | 21 |


# டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் நினைவுநாள்

'இருந்தமிழே உன்னால்
இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும்
[வேண்டேன்'

என்னும் ஆன்றோர் மொழிகளுக் கிணங்க உலகில் இருந்து வாழ்ந்தவர் டாக்டர், உ. வே. சாமிநாதய்யர் அவர்கள். ஐயரவர்கள் தமிழ்ப்பணியை நாடறியும் நகரறியும் ஊர் அறியும் உலகறியும். அவர்தம் தமிழ்ப்பணியை உணராதார் தமிழையே உணராதார் என்பதில் ஐயமில்லை. காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருளை ஆயும் அறிவுடையார் ஐயரவர்கள் தமிழ்ப்பணியை என்றும் மறவார். தமிழுலகம் ஐயரவர்கள் தமிழ்ப்பணிக்கு என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

உலகிற் பெரியோர் பலர் வாழ்ந்து மறைந்துள்ளார்கள். மறைந்தோர் பெருமையும் புகழும் அவர்க்குப்பின் படிப்படியாக மக்கள் உள்ளத்தினின்று மறைதலையும் பார்த்திருக்கிறோம். ஐயரவர்கள் நிலை அதற்கு மாறானது. நாள் செல்லச் செல்ல ஐயரவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டின் மாட்சிமை படிப்படியாக மக்கள் உள்ளத்திலோங்கி உலவாச் செழுஞ்சுடர் வீசுகிறது. அவர் பெருமையும் புகழும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்கிறது. தமிழ் வளர வளர ஐயரவர்கள் புகழும் வளரும்.

பிறந்து மொழிபயின்ற நாள் தொடங்கி இறுதிநாள் வரையிலும் தமிழ் நங்கையின் செழுமை பேணி வளர்த்த ஐயரவர்கள், தம் இளமைக் காலத்தில் திருவாவடுதுறை ஆதீன வித்துவான், திரிசிரபுரம் கவிஞர் பெருமான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் குருகுல முறையிற் கல்விபயின்றார்கள். 'எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம் அறத்தில் திரியாப் படர்ச்சி வழிபாடே' என்னும் இலக்கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்ந்து தம் நல்லூழ் துணை செய்யத் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையறிந்து பயின்று சிறந்தார்கள். குருகுலமாணவ பரம்பரைக்கே ஐயரவர்கள் சிறந்த வழிகாட்டியாக வாழ்ந்தார்கள். மாணவ நிலையில் இருந்து கல்வி பயின்றபோது உண்டான தமிழாயும் விருப்பம் அவர்தம் இறுதிக் காலம் வரையில் இருந்தது. அவ்விருப்பமே, சங்கத்தமிழ் நூல்கள் பலவும், காவிய நூல்களும், தூது, மாலை, உலாப் பிரபந்தங்கள் எண்ணில்லாதனவும் தமிழ் நாடு பெறும் வாய்ப்பினைத் தந்தது. ஐயரவர்கள் உழைப்பில்லை யாயின் புறநானூறு போன்ற சங்கநூற் சிறப்புக்களும், சிலப்பதிகாரம் சிந்தாமணி போன்ற காவியப் பெருமைகளும், சில்லரைப் பிரபந்த நூற் செழுமைகளும் தமிழ் நாடு எங்ஙனம் உணர்ந்திருக்கும்?

ஐயரவர்கள் வாழ்ந்த சுமார் எண்பத்திரண்டு ஆண்டுகளும் தமிழ்நாட்டின் நல்லூழ் சிறந்த காலம் என்று கூறலாம் அவர்கள் தந்நலம் பேணாவுழைப்பு, தமிழகத்தின் பெருமை என்றும் சிறப்படைதற்கு ஏதுவாகச் செழித்தது. மூலை முடுக்குகளிலும், அறிஞர்கள்கைக் கெட்டா நிலையிலும் ஓலைச் சுவடிகளாகக் கிடந்த பழந்தமிழ் நூல்களை எல்லாம் அரிய பேருழைப்புக் கொண்டு திரட்டி ஆராய்ந்து அழகு சிறப்ப அச்சேற்றி உலகுக்கு வழங்கிய, ஐயரவர்கள் மேற் கொண்ட முயற்சிகள் எல்லாம், அவர்கள் வெளியிட்ட ஒவ்வொரு நூன்முகத்தும் காணும் முன்னுரை நன்கு விளக்கும். அவர்தம் இறுதிக் காலம் வரையில் இத்தகைய சுவடி ஆராய்வும் நூல் வெளியீடும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. அவர் காலகதிக்குப் பின்னர் கூட அவர் வெளியிடச் செப்பம் செய்து வைத்திருந்த சில நூல்கள் வெளியாயினவெனின் அவர் உழைப்பினை எவ்வாறு புகழ்வது!

ஐயரவர்களைத் தமிழ்த்தாத்தா என்று தமிழுலகம் பாராட்டிப் புகழ்கிறது. தமிழ் பேணி வளர்த்த செம்மலார்க்கு அப்பெயர் எவ்வாற்றானும் பொருந்துமல்லவா!

ஐயரவர்களால் தமிழுலகத்துக்கு அறிமுகமான வித்துவான்கள் எத்துணையோபேர். அவர்

(7-ம் பக்கம் பார்க்க)

## சமயப் பகுதி – அருள் வலிமைக்கு

# வழிபாடும் வான்பயனும்

"இளம் பூரணன்"

வாதவூரடிகள் ஞான நிலையில் நின்று இறைவன் திருவருட் பேற்றை அடைந்தவர். அவர் ஆண்டவனை வழிபட்டதெல்லாம், பொய்ம்மை நிறைந்த இவ்வுலக பாச பந்தங்களினின்று வீடு பெற்று இறவா இன்ப நிலையை எய்துதற்கேயாம்.

தேவர்கள் வாழும் துறக்கவுலக இன்பங்கள் நிலையானவை அல்ல. தேவர்களுக்கும் மூப்பு பிணி சாகாடு என்பனவுண்டு. மக்கள் வாழ்க்கையை விட ஒருபடி மேலானது என்பதைத் தவிர வேறு தனிச் சிறப்பு ஏதும் தேவர் வாழ்வில் காணப்படல் இல்லை. 'இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத் தழிவில் வீடும்' என்று ஆசிரியர் பரிமேலழகர், வீட்டின்பத்தோடு இணையாகக் கூறியிருப்பினும் இந்திரன் முதலிய தேவர் வாழ்வும் போகமும் நிலையற்றவை என்பதே ஆன்றோர் கருத்து.

நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாராயணன்
அங்ஙனே
ஏறுகங்கை மணல் எண்ணில்
இந்திரர்
ஈறிலாதவன் ஈசன் ஒருவனே,

என்னும் அப்பரடிகள் திருவாக்கினால் தேவர் வாழ்வின் நிலையற்ற தன்மை விளங்குகிறது. வாதவூரடிகள், தேவர் வாழ்வை விரும்பியவரல்லர் என்றிருந்தாலும் ஒரு நாள் அழிதன் மாலையதான அவ் வாழ்வை வெறுத்தொதுக்கினார். 'கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு' என்னும் திருவாசகத் திருமொழிகள் அவர் கருத்தை விளம்புவனவாம்.

தேவர்கள் எய்திய இன்ப வாழ்வெல்லாம், அவர்கள் இடையறாது இறைவனை வழிபட்டதாற் போந்தனவே. அவர்கள் வேண்டுகோள், துறக்கவுலக இன்பவாழ்வோடு நின்றுவிட்டது. அதற்கு மேற் செல்லவில்லை. தமக்குத் திருவருள் விதித்த கால அளவுக்குத் துறக்க வின்பம் துய்த்துமயங்கிச் செருக்கி வாழ்வதும், அக்காலம் முடிந்ததும் இறப்பதும், மீண்டும் பிறப்பதுமாகிய இடையறாத சுழற்சியில் அவர்கள் காலங்கடத்துகின்றார்கள்.

இவ்வளவும் அவர்கள் இறைவனை வழிபட்டுப் பெற்ற அருட்பேறுகளே. நெஞ்சுருக நீடு நினைந்து வழிபடும் செம்மனச் செல்வர் வேண்டிய வேண்டியாங்கு அருள் செய்யும் ஆண்டவன், தேவர்கள் குறித்து வேண்டிய வண்ணம் அவர்கட்குத் துறக்கவுலக இன்பத்தை அளித்தான் போலும்! அவர்கள் வாழ்த்தும் வணக்கமும், தாம் உயர்ந்து, தம்மினும் தாழ்ந்த மக்கள் தம்மை வழிபட்டுப் போற்றும் நிலையில் இன்புற்று இருத்தலோடு நின்றுவிட்டன. துய்க்கும் இன்பம், மேலும் மேலும் பெரும் போகத்தில் விருப்பம் உண்டாக்குதலால், மேலுமேலும் அத்தகைய இன்ப வாழ்வையே விரும்புவாராயினர். ஆதலால் தேவர்கள் மீண்டு மீண்டும் பிறவி எய்தும் நிலையை அடைந்தார்கள்.

பந்தமும் வீடும் பரமன் திருவருளே தரவல்லது. தேவர்கள் பந்தத்தை விரும்பினர். அங்ஙனமே அருளைப் பெற்றனர்.

வாதவூரடிகள், பந்தத்தை அறவே வெறுத்தொதுக்கினர். இறவா இன்ப நிலையை எய்துவிக்கும் திருவருளிற் சென்று கலப்பதற்குத் தடையாக இருக்கும் பாழ்த்த பிறவியை வேரோடு மாய்க்க எண்ணினார். பிறவியை ஒழித்தருளுமாறு ஆண்டவனை வழிபடுகின்றார். தேவர்கள் வழிபாடு, பயன் கருதிச் செய்வது. மேலும் போகம் சிறக்கவும் அதற்கேதுவான பிறவி யெய்தவும் செய்வது. மாணிக்கவாசகர் செய்யும் வழிபாடு பயன் கருதாதது. போகத்திற்கேதுவான பிறவியை ஒழிக்க வேண்டுவது. இவையே இவற்றின் அடிப்படை வேற்றுமைகள்.

'பிறப்பறுத்தருளல் வேண்டும்' என்ற வேண்டுகோளால் திருவருள், மக்கட் பிறவியொழித்து தேவர் வாழ்வைக் கொடுத்தருளலும் கூடும் என்று கருதி அதனைத் தாம் விரும்பாது வெறுத்தலையும், அதற்கும் மேலான பந்தமற்ற வீட்டின்பத்தைத் தாம் விரும்புதலையும் புலப்படுத்துதற்குத் தேவர் வழிபாடு செய்து பெற்ற வாழ்வு நிலையை முன்னதாக விளக்கிக் கூறி, அதன் பின்னர்த் தாம் வேண்டும் வரத்தின் வேற்றுமையையும் மாட்சிமையையும் புலப்படுத்த வேண்டிய அடிகளார், ஆண்டவனை முன்னிலைப் படுத்தி,

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம் வாழ்வான் மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து
தம்மையெல்லாம் தொழ
[வேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந்
தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப் பறுத்திடுவான்
யானும் உன்னைப் பரவுவனே
(திருச்சதகம்)

என்று கூறியுள்ளார்.

* * * *

**கலைப் பகுதி — உள வலிமைக்கு** (முன் தொடர்ச்சி)

# சோழர்காலத் தேர்தல்முறை

— முத்து வடிவேல் —

தமிழக மெங்கணும் மும்முரமாகத் தேர்தல் நடைபெறும் நேரத்தில் பண்டைத்தமிழகத்தின் தேர்தலை நினைவு படுத்தும் எண்ணத்துடன் இக்கட்டுரை எழுதப்பட்டது.

தமிழ்மக்களின் பண்டைக் கால ஒழுக்க வழக்கங்களை அறிதற்கும். அவர்களின் அரசியல் அறிவின் திறமையை உணர்வதற்கும் தஞ்சை காலச் சோழர்களே நமக்குப் பேருதவி புரிந்துள்ளனர்.

அவர்கள் காலத்தில் நடைபெற்ற அரசியல் அமைப்பைக் காணும் போது அக்காலத் தேர்தல் முறை தலை சிறந்ததாகக் காணப்படுகிறது. ஊரெங்கும் அமைக்கப்பட்டிருந்த ஊர்ச் சபைகளே நிலங்களுக்கு அரசிறை ஏற்படுத்தவும், அதனைத் திரட்டி அரசனுக்கு அனுப்பவும் செய்து வந்தன. இரண்டாண்டு காலத்திற்குள் இறைகொடாதவர்களின் நிலங்களைப் பறிமுதல் செய்து பொதுச் சொத்தாக்கி விற்பனை செய்யவும் அச்சபைக்கு அதிகாரம் இருந்தது. ஊர்ச்சபையில் பல பிரிவுகள் இருந்தன, சம்வத்சரசாரியார், தோட்ட வாரியார், பொன் வாரியார், பஞ்சவாரியார் என்ற பிரிவுகள் அதில் அடங்கியிருந்தன. நாற்பத்திரண்டு உறுப்பினர்கள் உடைய அந்தச்சபையில் பன்னிருவர்சம்வத்சரவாரியார், பன்னிருவர் தோட்ட வாரியார். அறுவர் ஏரிவாரியார், அறுவர் பொன்வாரியார், பஞ்சவாரியார் அறுவர், ஆக இடம் பெற்றனர்.

உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குமுன் அவர்களின் தகுதியும் திறமையும் தெரிந்தே அவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். உறுப்பினராக இருப்பதற்கு வேண்டிய தகுதியை நிர்ணயிக்கும் சட்டமும் அக் காலத்தில் இருந்தது. கால் வேலி நிலமுடைமை, சொந்தவீடு, கல்வி கேள்விகளில் வல்லமையுடைமை, அவற்றைப் பிறர்க்குணர்த்தும் திறமை என்பன அவர்களுக்கு இன்றியமையாத தாகும். முப்பத்தைந்துக்கு மேற்பட்டு எழுபத்தைந்துக்குக் குறைந்த வயதினராய் இருப்பதோடு காரியங்களை நிறைவேற்றுவதில் தகுதியும் திறமையும் அமைந்திருக்கவேண்டும். தவிரத் தற்கால அரசியலில் பங்குள்ளவர்கள் போட்டியிடுவது போன்று அவர்கள் போட்டியிட முடியாது. மூன்று ஆண்டு காலங்களாக எவ்வகையான காரியம் நிறைவேற்றும் பிரிவிலும் அவர்கள் உறுப்பினராக இருந்திருந்தால் அவர்களுக்கு போட்டியிடும் உரிமை கிடையாது.

மற்றுமொரு அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சியும் நடைபெற்று வந்தது. எந்தக் காரியம் நிறைவேற்றும் கழகத்திலாவது உறுப்பினராக இருந்து இதற்கு முன் சரியான கணக்குக் கொடாதவர்களின் உறவினர்கள் யாருமே உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கத் தகுதியற்றவர்களாவார்.

கொலை, களவு, காமம் முதலிய இவைகளில் ஏதேனுமொன்றைச் செய்தவர்களேனும் அவர்கள் உறவினராக இருப்பவரேனும் தேர்தலுக்குத் தகுதி அற்றவரே.

மேற் கூறிய தகுதியுடைய ஊர்ச்சபை உறுப்பினர்கள் ஆண்டுதோரும் தேர்ந்தெடுக்கப்படுவர். அரசன் ஆணைப்படி, நாட்டில் சபை கூடும் மாளிகையில் இத் தேர்தல் நடக்கும். இளைஞர் முதல் முதியோர் வரை ஊரிலுள்ள யாவரும் அங்குக்கூடுவர். இக்காலத்தைப் போன்று இருபத்தொரு வயதானவர்களுக்கு மட்டுமே என்றதடைகிடையாது. பத்து பனிரண்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் அதில் பங்குகொள்ளலாம்.

சபைக்கு நடுவிலே தேர்தற்பெட்டி (குடம்) வைக்கப்படும். அனைவருடைய முன்னிலையிலும் அந்தக் குடம் காலியென்பதைக் காட்டப் படும். ஒவ்வொரு ஊரையும் முப்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பிரிவில் உள்ள மக்களுக்கும் உறுப்பினராக நிற்கத் தகுதியுடைய மக்களின் பெயர்கள் அறிவிக்கப் படும். மக்கள் தம் கருத்தில் தகுதியுடையவர் என்று கருதும் ஒருவரின் பெயரை ஓலையில் எழுதிக் கையில் வைத்துக் கொண்டிருப்பர் (இதில் இருந்து நாம், எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை தஞ்சை காலச் சோழர் காலத்தில் இருந்தது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.) கையில் உள்ள ஓலைகளை ஒருவர் பகுதி வாரியாக வாங்கிக் கட்டுவார். அதின்மேல் அது எந்த பிரிவைச் சேர்ந்த தென்பதற்கு அடையாள ஓலையெழுதி நன்றாகச் சுற்றிக் கட்டிக் குடத்தில் இடுவார்கள்.

மேற்கூறிய முப்பது பகுதியினரும் செய்து முடிந்தபின் அங்கு நடைபெறுவது இன்னதென்றறியாத சிறுவன் ஒருவனை அழைப்பார்கள்.

[வரும்]

## அன்பர், பட்டியின் சென்ற வாரத் தொடர்ச்சி

அ. வ - எ. 347
திரு மு. அரங்கநாதன் அவர்கள்
1-24, அவதானம் பாப்பையர் தெரு,
சூளை, சென்னை-7.

அ. வ - எ. 348
திரு எம். ஆர். ஜம்புலிங்கம் அவர்கள்
10, சின்ன தம்பி முதலி தெரு,
திருவேட்டீசுவரன் பேட்டை,
சென்னை-5.

அ. வ - எ. 349
திரு கே. பாலசுப்பிரமணியம் அவர்கள்
4, கோவிந்தநாயக்கன் தெரு,
சூளை, சென்னை-7.

அ. வ - எ. 350
திரு எஸ். மாணிக்கவேலு அவர்கள்
திரவிய சகாய ஆரம்பப் பாடசாலை,
பெருங்கடல் புத்தூர்,
தேசூர் அஞ்சல், வந்தவாசி தாலுக்கா,
வடஆற்காடு மாவட்டம்.

அ. வ - எ. 351
திரு வி. ச. ஆழ்வார் அவர்கள்
உதவி ஆசிரியர்,
வெட்டினெரி காலேஜ்,
வேப்பேரி, சென்னை-7.

அ. வ - எ. 352
திரு அ. ஆறுமுகம் அவர்கள்
48, சேஷாசல முதலி தெரு,
சைதாப் பேட்டை, சென்னை-15.

அ. வ - எ. 353
திரு கு. பட்டம்மாள் அவர்கள்
35, அம்மன் கோயில் தெரு,
சென்னை-3.

அ. வ - எ. 354
திரு டி. பி. கோவிந்தசாமி அவர்கள்
உரிமையாளர், ராதா பிஸ்கட் பாக்டரி,
161, தங்கசாலைத் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 355
திரு பி. டி. முனுசாமி அவர்கள்
கம்பவுண்டர்,
கவர்ன்மெண்ட் மெடிகல் ஸ்டோர்ஸ்,
பெரிய மெட்டு, சென்னை-3.

அ. வ - எ. 356
திரு ஜி. கே. மனு அவர்கள்
கலைஞர், ஜனனீ நிகேதன்,
80A, படவட்டம்மன் கோயில் தெரு,
சென்னை-12.

அ. வ - எ. 357
திரு பி. இராஜாராம் பிள்ளை
அட்டண்டர், வெட்டினெரி காலேஜ்,
சென்னை-7.

அ. வ - எ. 358
திரு வி. கு. நடராஜ முதலியார்
386, பைகிராப்ட்ஸ் ரோடு,
புதுப்பாக்கம் சென்னை-14

அ. வ - எ. 359
திரு ஏ. ஆர். வேதநாயகம் அவர்கள்
லக்ச்சரர், வெட்டினரி காலேஜ்,
சென்னை-7.

அ. வ - எ. 360
திரு வி. செல்லபெருமாள் அவர்கள்
93, சிமிட்ரி ரோடு,
பழைய வண்ணரப்பேட்டை,
சென்னை-21.

அ. வ - எ. 361
திரு டி. கமலாம்பாள் அவர்கள்
23, வைத்திய நாதமுதலி தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 362
திரு சி. ஆர். விஸ்வநாத முதலியார்
59, ஆதியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-1

அ. வ - எ. 363
திரு பி. எஸ். கோபால கிஷ்ணன்
அட்டண்டர், வெட்டினெரி காலேஜ்,
சென்னை-7

அ. வ - எ. 364
திரு ஜி. டி. மாணிக்க நாயக்கர்
22, ஆண்டியப்ப நாயக்கன் தெரு,
சூளை, சென்னை-7

அ. வ எ, 365
திரு டி. விஸ்வநாதன் அவர்கள்
சாந்திநிகேதன்,
பந்தர் கார்டன் தெரு,
சென்னை-11.

அ. வ - எ. 366
திரு ச. த. வீரன் அவர்கள்
8, நைநியப்பன் தெரு,
மண்ணடி, சென்னை-1

அ. வ எ. 367
திரு ஐயார் அடிகள் அவர்கள்
15, கிழண்டை மாதாகோயில் தெரு,
சென்னை-13.

அ. வ - எ. 368
திரு தையநாயகியம்மாள் அவர்கள்
77, திருப்பள்ளித் தெரு,
சென்னை-1,

அ. வ - எ. 369
திரு அ. ர. தாமோதரன் அவர்கள்
5, மிருத்யஞ்சய்யர் தெரு,
வியாசர் பாடி, சென்னை-12

அ, வ - எ. 370
திரு பட்டம்மாள் அவர்கள்
93, சிமிட்ரி ரோடு,
சென்னை-21.

அ. வ - எ. 371
திரு ஜி. வைத்தியலிங்கம் அவர்கள்
118, வெள்ளாழத்தெரு,
புரசை, ன்னை-7.

அ. வ - எ. 372
திரு எம். பாலசுந்தரம் அவர்கள்
40, ஆதம் சாயபு தெரு,
இராயபுரம், சென்னை-13.

அ. வ - எ. 373
திரு தருமலிங்கம் அவர்கள்
23, நரசையர் தெரு,
சென்னை-21

அ. வ - எ, 374
திரு அம்சவேணியம்மாள் அவர்கள்
58, அண்ணு பிள்ளை தெரு,
சென்னை-1

அ, வ - எ. 375
திரு ஆ. வீரபத்ர முதலியார்
36, சாமி நாயக்கன் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை 2.

அ. வ - எ. 376
திரு பி. ஜி. குப்புசாமி முதலியார்
67, திருப்பள்ளித் தெரு,
சென்னை-1.

அ. வ – எ. 377
திரு ஏ. ஸி. மாசிலாமணி முதலியார் அவர்கள்
8, வைக்காகாரன் தெரு,
புரசை, சென்னை 7.

அ. வ – எ. 378
திரு வரதராசன் அவர்கள்
41, மூக்காத்தாள் தெரு,
புரசை, சென்னை–7

அ. வ – எ. 379
திரு க. மாசிலாமணி அவர்கள்
7–81, பாப் ஆம்ஸ்,
பிராட்வே, சென்னை–1

அ. வ – எ. 380
திரு ஏ. சாரதாம்பாள் அவர்கள்
15, ரவணையர் தெரு,
சென்னை-3.

அ. வ – எ. 381
திரு ஈ. ஆர். ஆலாலசுந்தரம் அவர்கள்
3, பரசு ராமமுதலி தெரு,
சென்னை–12.

அ. வ – எ. 382
திரு டி. எம். ஏழுமலை செட்டியார் அவர்கள்
14, ஆதியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-1.

அ. வ – எ. 383
திரு கே. எம். கன்னியப்பன் அவர்கள்
2, தானப்ப செட்டித் தெரு,
பார்க்டவுன், சென்னை–3

அ. வ – எ. 384
திரு சி. கே. குப்புசாமி முதலியார் அவர்கள்
4, வடமலை மேஸ்திரி தெரு,
சென்னை–1

அ. வ – எ. 385
திரு வே. நாராயணன் அவர்கள்
தேசுமுகிப்பேட்டை,
திருக்கழுக்குன்றம் அஞ்சல்
செங்கற்பட்டு மாவட்டம்,

## குருகுலத்தில் ஆர்வலராகச் சேர்ந்து ஆசிரியரவர்கட்கு காணிக்கை வழங்கிவரும் குருகுலச் சிறப்பினர்.

### ஆர்வலர்:

ஆ. வ – எ. 501
திரு சிவப்பிரகாச செட்டியார் அவர்கள்
ஓம்கங்கை விநாயகர்
அருள்நெறித் திருக்கூட்டம்,
மூர்மார்கட், சென்னை–3

ஆ. வ – எ. 502
திரு டி. ஆர். பார்த்தசாரதி முதலியார் அவர்கள்
இந்து யூனியன் கமிட்டி உயர்நிலைப் பள்ளி,
தொட்டிக் கலை குமரப்பமுதலி தெரு,
சூளை சென்னை–7

ஆ. வ – எ. 503
திரு சிவ. தியாகராசப் பிள்ளை அவர்கள்
30, ஏகப்ப நாயக்கன் தெரு,
சென்னை-21.

ஆ. வ – எ. 504
திரு எஸ். வீரராகவலு அவர்கள்
9, சந்திரப்ப முதலிதெரு,
சென்னை-1.

ஆ. வ - எ. 505
SRI P. V. MUDALIAR
14, NAVAJIVAN COLONEY
AHMEDABAD-14.

ஆ. வ - எ. 506
திரு நா. சங்கரன் அவர்கள்
29B, கங்காதீஸ்வரர் கோயில் தெரு,
புரசை, சென்னை-7

ஆ. வ - எ. 507
திரு எஸ். வி. ராமச்சந்திரன் அவர்கள்
20, அம்பிகாபுரம்,
அய்யாமுதலி தெரு,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2.

ஆ. வ - எ. 508
திரு எல். புஷ்பராஜ் அவர்கள்
27, ராபின்சன் பார்க் காலனி,
வண்ணாரப் பேட்டை,
சென்னை-21.

ஆ. வ - எ. 509
திரு ஏ. ஸி. கோவிந்தராசலு அவர்கள்
17 மூக்காத்தாள் தெரு,
வேப்பேரி, சென்னை-7

ஆ. வ - எ. 510
திரு பி. தங்கராசன் அவர்கள்
26 கௌஸ் மொஹிதீன் பேட்டை,
இராயபுரம், சென்னை-13.

ஆ. வ - எ. 511
திரு எஸ். பி. ராஜாபாதர் அவர்கள்
திருமலையப்பன் முதலி தெரு,
புரசை, சென்னை-7

ஆ. வ - எ. 512
திரு கனகசபை அவர்கள்
12, முத்தியாலு நாயக்கன் தெரு,
புரசை சென்னை-7

அ. வ - எ. 513
திரு சி. டி. சிவராஜ் அவர்கள்
12, பருத்தி வாக்கம் தெரு,
ஆலந்தூர் அஞ்சல்.

அ. வ - எ. 514
திரு டி. கே. மாணிக்கம் அவர்கள்
அவதானம் பாப்பையர் தெரு,
சூளை, சென்னை-

அ. வ - எ. 515
திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள்
அருன்டேல் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.

அ. வ - எ. 516
திரு ஜி. ராஜேந்திரன் அவர்கள்
28, கரியப்ப முதலி தெரு,
புரசை, சென்னை-7.

அ. வ - எ. 517
திரு ஸ்ரீரிபதி பி. இ. அவர்கள்
29B, கங்காதீஸ்வரர் கோயில் தெரு,
புரசை, சென்னை-7

ஆ. வ - எ. 518
திரு ஜெ. டி. எட்வர்டு அவர்கள்
22, கார்ப்பரேஷன்குவார்ட்டர்ஸ்,
ராபின் சன் பார்க் அருகில்,
சென்னை-21.

ஆ. வ - எ. 519
திரு வெ. கி. சிவராமன் அவர்கள்
33, வெங்கடாசல முதலிதெரு,
சென்னை-7

ஆ. வ - எ. 520
திரு எஸ். டி. மார்க்கசகாயன் அவர்கள்
24. ஜி. எ, ரோடு,
தண்டையார் பேட்டை,
சென்னை-21.

மொழிப் பதிகு – அறிவு வலிமைக்கு [முன்தொடர்ச்சி]

# சிலை பேசிற்று

(மணி)

அது பேசுவதைச் சிறிது நிறுத்திற்று; நானோ ஒன்றும் பேசாது மௌனமாக இருந்தேன்.

"கால்களிலே சலங்கை கலீர் கலீர் என்னவில்லை; ஆனால் கணவனோடு வாய்ச்சண்டை போடுவது இன்று பட்டாசு போல் வெடிபடுகிறது; அது பல இடங்களிலும் அதிர் வெடி ஒலிபோல் பலராலும் கேட்கப் படுகிறது

"அது மட்டுமன்று. இன்று இன்னிசைகள் கேட்க முடிவதில்லை; ஆனால் ஒன்று செல்வந்தர்கள் வீட்டிலே ஏதோ கேட்கின்றது; தமிழ் இன்னிசையல்ல, பல நாட்டுச் சங்கீதங்கள். பண் கிடையாது. வேறு என்னென்னமோ குரல். வெளியிலிருந்து கேட்டால் ஏதேதோ கத்துவது போன்று கேட்கும். மற்றவர்களைப் பற்றியோ எடுத்தியம்புவதற்கில்லை; சுருக்கமாகக் கூறுகிறேன், அழுகுரலும் வேறு பலவும் கேட்கும்."

"என்ன இப்படி இகழ்ந்து பேசுகின்றாயே;" என்று இடைமறித்துக் கேட்டேன்.

"வேறெப்படிப் பேசுவது? பண் இல்லாத; பழுத்த கருத்தில்லாத பாட்டும் ஒரு பாட்டா? ஏழிசையே என்னென்று தெரியாது. பாடுபவர்களை நான் வேண்டுமென்று இகழவில்லையே; என்னால் அதைக் கேட்டல்லவோ சகிக்கமுடியவில்லை"

நான் ஒன்றும் சொல்லவில்லை. எது சொல்லவும் புரியவில்லை. பேசாது அமர்ந்திருந்தேன்.

பொழுதுஓரளவுசென்றுவிட்டது;

நான் பொழுதைக் கவனிப்பதைக் கண்டுவிட்டது. "அன்பு, அருள், அறம், மறம், நடுவுநிலை, இன்பம், இன்னும் பல. எல்லாம் சேர்ந்து முன்பு மக்கள் உருவைக்கொண்டு இதுவும் இன்னும் பலவும் குழைத்து உருவச்சிலை அமைத்தார்கள். இன்று சிலை செதுக்குவார் இல்லை: நெஞ்சம் வெடிக்கின்றது. ஊர் அழகு பெறக் கோபுரம் அமைத்தனர். இன்று வெறும் புகைகள் தாம் தெரிகின்றன. அவையும் தேவைதான். ஆனால் சிறந்த சிற்பக்கலையை நாட்டிலே உருவாக்குவது அவசியமல்லவா? நேரம் சென்று விட்டது. சென்று வாருங்கள்.

"இயன்றால் ஒருநாளைக்கு வாருங்கள்" என்றது. அதன் குரல் தழதழத்தது. என் கண்களிலும் நீர் அரும்பியது. விடை பெற்று வீடு திரும்பினேன்.

முற்றும்

* * * *


## "குருகுலப் பற்பொடி"

குருகுல இல்லத்திலுள்ள மாணவர்களாலேயே செய்யப் பெறுகிறது.

இதன் ஆக்கம் ஏழைப் பிள்ளைகளுக்கே சேர்வதால் இதனை ஆதரிப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

குருகுலப் பற்பொடி உயர்தரமானது.

பல் கூச்சம் சீழ் வருதல்
பல் தேய்வு செந்நீர் வருதல்
பல் ஆட்டம் வாய் நாற்றம்

மற்றும் பல் தொடர்பான எல்லா வகை நோய்களையும் போக்கி, ஈறுகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ள உதவும்.

தமிழ் மருத்துவ முறைப்படி அரிய மூலிகைகள், வேர்வகைகள், மரப்பட்டைகள் சேர்த்துக் காலத்திற் கேற்றவாறு நுட்பமுறையில் செய்யப் பெற்றது.

ஒரு பை விலை 1 அணா

கோ. உலகநாதன்,

செய்கையாளர்:

குருகுலக் கைத்தொழில் நிலையம்
மதுராந்தகம் (அஞ்சல்).
செங்கற்பட்டு மாவட்டம்.


* * * *

**பணிப் பகுதி — உணர்வு வலிமைக்கு** [முன்தொடர்ச்சி]

# முயற்சியின் பலன்

— திரு A. C கோவிந்தராஜுலு —

**[குருகுலச் செயற்குழுத் தலைவர் திரு. நா. சங்கரன் M.A.L T. அவர்கள் வாழ்க்கைக் குறிப்பு]**

அக் கூட்டம் நடைபெறுகின்றதா வென்பதைத் தாமே நேரில்போய்க் கவனிப்பதுடன், அக் கூட்டங்களுக்கும் தலைமை வகித்து மாணவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் அக் கூட்டத்தினால் ஆகிய நன்மைகளை யெல்லாம் எடுத்துப் போதிப்பார். வருங்கால உலகிற்கு நல்ல மாணவர்களே சிறந்த அரசாங்க அமைப்பிற்கு அடிப்படைக் காரணம் என்று சொல்லி, அவ்வித சிறந்த நடையுடை பாவனைகள் கற்குமிடம் பாடசாலைதான் என்பதையும் மாணவர்களுக்கு உற்சாகம் உண்டாகும் வகையில் சொல்லுவார். இயல், இசை, நாடகம் ஆகிய முப் பயிற்சியிலும் பிள்ளைகள் மேம்படுவதைத் தாமே நேரில் கண்டு, தமது காலத்தை அவ்விதத்திலேயே மேலும் மேலும் கழித்து இன்புற்றுப் பரவசமாவார். இவ்விதம் அவரது காலம் கழிவதால் அவர் அழகும் இளம் பருவமும் உடையவராகவே இன்றும் விளங்குகிறார்.

பள்ளிப் பிள்ளைகள் உடல் உரம் பெறுவான் வேண்டிப் பல உபாத்தியாயர்களை உற்சாகப்படுத்தி தேகாப்பியாசத்தை முதலில் அவர்களே கற்கும் திட்டத்தை வகுத்தார். பல இடங்களில் 'சென்னைக் கார்ப்பரேஷன்' சிறுவர் விளையாடுமிடங்களையும், பெரியவர்கள் விளையாடும் இடங்களையும் ஏற்படுத்தினார்.

இன்னபல நற்குணங்களில் மேம்பட்டு விளங்குவதை யறிந்து அரசாங்கத்தார் இவரை சென்னை நகராண்மைக்கழக உதவித் துணையாளராக நியமித்தனர். அப்பணியில் ஈடுபடுங்கால் தன்னிடம் ஒப்படைக்கப் பட்ட வேலையைச் செய்வனே செய்ததும் அல்லாமல் தம்மிடம் பணி செய்பவர்களுக்கெல்லாம் அப்போதைக்கப்போது உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்து, அவர்களை அவர்களது வேலையில் உற்சாக முள்ளவராகச் செய்வார். ஆண்டவனைச் சதா மனமார நினைத்து வாயாரப் பாடி கையாரச் சிவத்தொண்டுகளை யெல்லாம் சிறப்புடன் செய்வார். தாம் செய்யும் ஒவ்வொரு வேலையையும், கடவுள் கூட இருந்து கவனிக்கின்றார் என்ற நோக்கத்துடன் செய்வார்.

தாம் வழிபடும் கடவுளின் நல்லருள் வந்து பொருந்தியதால் சுமார் $4\frac{1}{2}$ மாத காலம் கார்ப்பரேஷன் கமிஷனர் பதவியையும் பெற்றார். அப்பணியைச் செய்கின்ற காலத்தும் அவரிடம் உத்தியோக மமதை கிடையாது. எளியவரையும் வலியவரையும் ஒரு சமமாகவே நோக்குவார். சதா உழைப்பதும், வேலை செய்வதும், பிறருக்குத் தம்மால் இயன்ற உதவி செய்வதுமே தமது உயர்ந்த இன்பமாக் கொண்டாரே யன்றி வேலை செய்வதால் சலிப்படைந்தார் இல்லை. ஓய்வு நேரம் ஒரு சிறிது ஏற்படினும் அந்நேரங்களில் கூட உயர்ந்த நீதிகளைப் புகட்டும் தமிழ் நூல்களை ஆராய்ச்சி செய்வார். தாம் ஆராய்ச்சி செய்ததை உடனுக்குடன் மக்களுக்குப் பல கூட்டங்களுக்குச் சென்று சொற்பொழி வாற்றுவதன் மூலம் தெரிவிப்பார்.

தினமும் வைகறை யெழுந்திருப்பார். கடவுளை வணங்குவார். சுமார் பத்து மைல் தூரமாகிலும் காலையில் நடையும் ஓடுதலுமாக சென்னை நகரில் உடல் உரம் பெறும் பொருட்டுச் சுற்றி வருவார். வீடுவந்ததும் குளிப்பார். குளித்தவுடன் தம் பிள்ளைகளுடன் பூஜை அறையில் உட்கார்ந்து கடவுளைப் பூசிப்பார் பூசிக்குங்கால் கடவுளின் செயல்களை யெல்

(7-ம் பக்கம் பார்க்க)

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

லாம் வாயார வாழ்த்து வார். மனிதப் பிறப்பினு லாகிய இன்ப நுகர்ச்சி யைக் கடவுளைத் தோத் தரித்த வண்ணமாகக் கழிப்பார். அலுவலகச் செயல்களை யெல்லாம் மாலை 6 மணி வரையிலும் செய்வார். மாலையிலும் சுமார் 7 மைல் தூரமாகி லும் நடந்தும் ஓடியும் உடல் உரம் பெறச் செல் வார். பிறகு இரவு 7 மணிக்கு வீடு வந்து சேர்ந்து, பூசை அறையில் உட்கார்ந்து மங்கை பாக னாகிய சிவபெருமானை இன் னிசையுடன் பாடி ஆனந்த பரவசமாவார். தம்மைத் தன் இல்லத்தில் காண யாராவது வந்தால் முக மன் கூறி வரவேற்று ஆவன செய்வார். சிவத் தொண்டில் அதிகமாக ஈடுபடுவார். சிவனடியார் கூட்டங்களுடன் கலந்து சென்று பல சிவ தலங் தலங்களைத் தரிசிப்பார். ஆங்காங்கே சிவனடியார் கூட்டங்களுக்குத் தலைமை வகித்து நற்போதனைகளை மக்களுக்குக் கூறுவார். இங்ஙனம் உழைப்பையே இன்பமாகஎண்ணும்.என் சக்கரன், சங்கரன் அரு ளால், திடகாத்திரமும், வீர உணர்ச்சியும், பற் றற்ற உள்ளமும் பெற்று அழியாப் புகழுடன் என் றென்றும் அவரது முயற் சியின் பயனால் வாழ வேண்டும் என்று சிவ பெருமான் திருவருளை வேண்டுகிறேன்.

முற்றும்

* * * *

[உ-ம் பக்கத் தொடர்ச்சி]

களில் முதன்மையானவர் இன்று கலைமகளாசிரியராகத் திகழும் அறிஞர், திரு. கி. வா. ஜகந்நாதய்யர் ஆவர்.

ஐயரவர்களின் 103 வது பிறந்த நாள் விழாவினை இன்று தமிழுலகம் கொண்டாடுகிறது. அவர்களின் தமிழ்ப்பணியை நினைக்க நினைக்க ஒவ்வொரு தமி ழன் உள்ளத்திலும் தமிழ் மொழியின் உயர்வு பேணும் ஒருதனிப் பற்று ஓங்கிக் கிளைக் கும் என்பது உறுதி. வாழ்க ஐயரவர்கள் நினைவு!

சி. து. க.

* * * *

## மணித்திரள்

மனித வாழ்வு சீலத்தி னாலேயே நிறைவடை கிறது.

மற்றவர்கள் ஒன்றும் தெரியாதவர்களாயிருந் தும் தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள் என்று நினைக்கிறார்கள். நானோ ஒன்றும் தெரியாதவன், அப்படித் தெரியாதவன் என்று நான் தெரிந்து தொண்டிருக்கிறேன். இது எனக்கும் மற்றவர்களுக்கு முள்ள வித்தியாசம்.

பொய்தீர் ஒழுக்கம் எதுவோ அதுவே அறிவு.

சிந்தனை தெளிவு படுத்த வேண்டியிருக்கிறது. சிந் தனை தெளிவடைந்த இடத் திலேதான் உண்மை புலப் படும்.

புலன்களால் அறிய முடி யாத பொருள்களை அறி வது எதுவோ அதுவே ஆத்மா எனப்படும்.

உள்ளது எதுவோ அதுவே அறிவு. உள்ளது மாய் இல்லதுமாய் இருப் பது அபிப்பிராயம். இல் லாதது அறியாமை.

அபிப்பிராயம் என்பது அறிவை விட இருட்டாயும் அறியாமையை விட வெளிச்சமாயுமிருக்கி றது.

—சாக்ரட்டீஸ்

* * * *

**Phone 55034 Tel. Eakayam**

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

ELEPHANT KISAN

**பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53. கிடங்குத் தெரு. சென்னை 1.

## குருகுலச் செய்தி:

**மாணவர் இல்லம் உணவகத்திற்கு ஒரு நாள் செலவு ரூ. 20-0-0 (சிலர் மேலும்) ஏற்று அன்புடன் உதவியவர்கள்.**

**(இவர்களுக்கு ஓராண்டுக்கு 'முல்லைக் கொடி' தொடர்ந்து இலவசமாக அனுப்பி வைக்கப் பெறும்.)**

முன் வரவு—ரூ 630

32 எம். தேவராச முதலியார்,
'லக்ஷ்மி நிலையம்'
29, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு,
வேப்பேரி, சென்னை-7. — 20

ஆக ரூ 650

## இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் நினைவு.

நம் குருகுல ஆசிரியர் இயன்றபோதெல்லாம் இடைக்கழி நாடு என்னும் இன்பத் தமிழ்ப் பகுதிக்குச் செல்வதுண்டு. அண்மையில், அந் நாட்டின் கடப்பாக்கம் வேம்பனூர், கோட்டைக்காடு முதலிய ஊர்கட்குச் சென்றபோது, நல்லூர் என்னும் நத்தத்தனார் ஊர் முழுதும் சுற்றிப் பார்த்தார்கள் கடப்பாக்கத்தில் நிகழ்ந்த ஒர் விழாவில் சில சொற்கள் சொல்ல நேர்ந்தது.

அப் பக்கத்தில் உள்ள அன்பர்கள், நல்லூரில் நத்தத்தனார் நினைவாக நிலம் நன்கொடை வழங்குகிறோம், அவர் பெயரில் எவையேனும் இன் தமிழ் நிகழ்ச்சிகள் அவ்வப்போதும் நல்லூரில் நிகழ்ந்து வருதலையும் குருகுலத்தாரும் தமிழ் நல்லோரும் அடிக்கடி கூட்டமாக வருதலையும் விரும்புகிறோம் என்று ஆசிரியரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், 'குருகுலக் கிளை நிலையம்' ஒன்று திருவருளுதவியால் அங்கே அண்மையில் அமைதல் கூடும், குருகுலத்தார் பலரும் மாம்பாக்கம் தலைமை நிலையத்துக்கு வருகின்ற காலங்களில், இடைக்கழி நாட்டு நத்தத்தனாரது நல்லூர்க்கு ஒரு தமிழ்ப் பயணமாகச் சென்று இன்புற்றுவருதல் நல்லது.

## ஆசிரியர் விரிவுரைகள்

**(நடக்க இருப்பன)**

**குளம்பேடு:**

16-3-57 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு "திருஞான சம்பந்தர்" விரிவுரை.

**சென்னை:**

17-3-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-மணிக்குச் சென்னை சென்ன மல்லிகேஸ்வரர் கோயிலில், 'பெரிய புராணம்' விரிவுரை.

**பொள்ளாச்சி:**

18-3-57-ல் அவ்வூர் அம்மன் விழாவில் 'திருக்குறள் கடவுள் வாழ்த்து' என்னும் விரிவுரை.

**விருதுநகர்:**

19-3-57-ல் காரைக்காலம்மையார் மாதர் கழகத்தில், 'அம்மையார்' என்னும் விரிவுரை.

### பாடசாலைக்கு மரப்பலகை உதவி

இடைக்கழி நாட்டைச் சேர்ந்த வேம்பனூர் திரு முத்துக் கிராமணி அவர்கள், நம் குருகுலப் பிள்ளைகள் பள்ளியில் அமர்வதற்குரிய மாம்பலகைகள் சில 6-3-57-ல் அன்பளிப்பாக வழங்கி யிருக்கின்றனர். நன்றி.

### 9-3-57-ல் பிடி அரிசி வரவு விவரம்

| பெயர் | அரிசி வரவு |
|---|---|
| சென்னை: | |
| திரு எ. பேபி அம்மாள் | அரைப்படி |
| கே. பச்சை அம்மாள் | அரைப்படி |
| சின்னம்மாள் | அரைப்படி |
| பார்வதி அம்மாள் | அரைப்படி |
| சிவஞானம் | அரைப்படி |
| ஜெயம்மாள் | 1-படி 3-ஆழாக்கு |
| ஆர். குப்பம்மாள் | முக்கால் படி |
| எஸ். நவநீதம்மாள் | 1-படி 2-ஆழாக்கு |
| எம். பட்டம்மாள் | அரைப்படி |
| கே. சாரதாம்பாள் | 1-படி 4-ஆழாக்கு |
| தெய்வயானை அம்மாள் | 4-அரை ஆழாக்கு |
| கமலம்மாள் | 1-படி |
| வி. சின்னம்மாள் | முக்கால் படி |
| பால்கார பட்டம்மாள் | முக்கால் படி |
| சந்திராபாய் அம்மாள் ரொக்கம் 1—8—0 | 2-படி |
| திருமதி பார்த்தசாரதி முதலியார் | முக்கால் படி |

1ம் பக்கத் தொடர்ச்சி

தண்டித்தல் தனது கடமையாகாது, தண்டிப்பது, இவ்வுலகில் அரசன் கடமை, இருமையிலும் இறைவன் கடமை!

மேலும், மறந்து முனைப்பவிந்து அமைதிகொள்ளும் உள்ளமே, நன்மைகள் விளையும் இடம், அதனால், 'அறனல்லன செய்யாமை நன்று' என்று அருளுடன் ஆசிரியர் அறிவுரை கூறினர்.

— இ. அ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனக்குக் கடமைகள் வேறு பல இருக்கப் பிறர் மாட்டு இவ்வஞ்சினம் ஆகாது எனவும், ஒறுத்தல் தன் அறம் அன்று எனவும் விளக்குவார், 'அறனல்ல' என்றார்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: கி. சு. பாலசுந்தரம்,
குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ்நாடு.